# சின்ன வெங்காயம் உற்பத்தி இலாபகரமாக இருக்கும்

இந்தியாவில் பயிரிடப்படும் காய்கறிகளில் சின்ன வெங்காயம் முக்கிய இடம் வகிக்கின்றது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரபிரதேசம் மற்றும் ஒடிசா ஆகியவை சின்ன வெங்காயம் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகின்றன. சின்ன வெங்காயம் சாகுபடி மற்றும் வர்த்தகத்தில், கர்நாடகா மாநிலம் தமிழ்நாட்டின் முக்கிய போட்டியாளராக திகழ்கிறது. மொத்த வெங்காய உற்பத்தியில் தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 75 சதவீதம் பங்களிப்பு உள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி திறன் 12 டன்கள்/எக்டர் ஆகும். தமிழகத்தில் மே-ஜூன் மற்றும் அக்டோபர்-நவம்பர் ஆகிய மாதங்கள் சின்ன வெங்காயம் அதிக சாகுபடி செய்யும் முக்கிய பருவங்களாகும். கோ 1, கோ 2, கோ என் 5 ஆகிய இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. கோ என் 5 இரகமானது ஏற்றுமதிக்கு ஏற்ற இரகமாக கருதப்படுகிறது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா மற்றும் வளைகுடா ஆகிய நாடுகளுக்கு சின்ன வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கர்நாடகா மாநிலம், மைசூரிலிருந்து சின்ன வெங்காயம் வரத்து திண்டுக்கல் சந்தைக்கு, ஜூலை மாதம் வரை இருக்கும். நாற்றங்காலில் இருந்து பெறப்பட்ட சின்ன வெங்காயத்தின் அளவானது, விதை வெங்காயமாக பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. நடப்பாண்டில், தமிழ்நாட்டில் சின்ன வெங்காயத்தின் பரப்பளவு மற்றும் உற்பத்தி நிலையாக உள்ளது.

உடுமலைபேட்டை, தாராபுரம், துறையூர் மற்றும் நாமக்கல் ஆகிய பகுதியிலிருந்து தொடர்ச்சியாக சின்ன வெங்காயம் வரத்து சந்தைக்கு வருகிறது. தென்மேற்கு மழைக்காலம் தொடங்குவதாலும், அதனால் நோய் தாக்கும் சூழல் உள்ளதாலும், தரமான சின்ன வெங்காயம் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு

ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான சின்னவெங்காயத்தின் பண்ணை விலை ஜுலை-ஆகஸ்ட், 2016 மாதங்களில் கிலோவிற்கு ரூ. 32 - 35 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மழைக்காலம் தொடங்கினால் கிலோ-50 ரூபாய் வரை செல்ல வாய்ப்புள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641 003

தொலைபேசி - 0422-2431405


**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்

காய்கறிப் பயிர்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி எண் - 0422-6611374, 0422- 6611283